# சிறப்பு சார்பு நீதிமன்றம் (LAOP) எண்.1 , ஜெயங்கொண்டம்

அசல் வழக்கு எண். 64/2020

நாள்: 27.07.2026

வா.சா. 1 – ராஜதுரை

2026–ம் ஆண்டு ஜூலை 27–ம் நாள் (1969–ம் ஆண்டு 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி.கிருஷ்ணவேனி, கிரேடு–II பெஞ்ச் கிளர்க் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1ம் பிரதிவாதிக்கு உரிமையுள்ள சொத்திலும், அவரால் என் பெயருக்கு வாங்கப்பட்ட சொத்திற்கும், 1ம் பிரதிவாதி உயிருடன் உள்ளபோதே வாதியை தவிர வேறு எந்த வாரிசுகளும் உரிமை கோரவில்லை என்றால் சரியல்ல. பி அயிட்ட சொத்துக்கள் என் பெயரில் 1ம் பிரதிவாதியால் வாங்கப்பட்டு அவரால் அனுபவம் செய்யப்பட்டு 2ம் வாதிக்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டு அவருடைய அனுபவத்தில் விட்டுவிட்டதால் 1ம் பிரதிவாதி மீது கோபம் கொண்டு ஏ அயிட்ட சொத்தை உண்மைக்கு மாறாகவும், சட்டத்திற்கு புறம்பாகவும், எப்படியாவது பி அயிட்ட சொத்துக்களை அடைய வேண்டி உண்மைக்கு மாறான சங்கதிகளை கொண்டு இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி திருமணம் ஆன காலம் முதல் அவர் கணவருடன் வசிக்கும் முழுமையான முகவரி தெரியாததால் 3ம் பிரதிவாதிக்கு வழக்கு தொடுக்கப்பட்ட 3 ஆண்டு காலத்திற்கு மேலாக சம்மன் சார்வு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதிக்கு திருமணம் ஆன காலம் முதல் அவருக்கோ, அவரது கணவர் மற்றும் குழந்தைகளுக்கோ, எந்தவிதமான உதவிகளும், சாவரட்சனைகளும் நான் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் அவ்வாறு செய்ததற்கான ஆவணங்கள் எதுவும்

தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதேபோல் அண்ணனாக தங்கைக்கு செய்யவேண்டிய எந்தவொரு சீர்வரிசைகளும் செய்யவில்லை என்றால் சரியல்ல, சீர்வரிசைகள் செய்துள்ளேன். அதற்கு ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை. நாங்கள் எங்கள் தந்தைக்காகதான் கூட்டுக்குடும்பமாக இருந்தோம் என்றாலும், ஆனால் எப்போதும் அவ்வாறு இருந்தது இல்லை என்றால் சரியல்ல. இல்லாத கூட்டுக்குடும்பத்திற்காக பி அயிட்ட சொத்தை அடையவேண்டும் என்பதற்காக உண்மைக்கு மாறான சங்கதிகளை கொண்டு இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் வைத்து சாட்சி சொன்னவை என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு அவரால் தட்டச்சிடப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்திடப்பட்டது.

/ ஒப்பம் / R. கார்த்திகேயன்
சிறப்பு நீதிபதி எண்.1,
ஜெயங்கொண்டம்.